# வாசிப்பின் மகிழ்ச்சி 2024



## தளிர் மற்றும் மழலையர் வகுப்பு





# உதவும் கரங்கள்



வீட்டிலுள்ள எளிய பணிகளுக்கு உதவ குழந்தைகளுக்குக் கற்பிப்பது பொறுப்புணர்வைத் தூண்டுவதோடு, அவர்களின் சுற்றுப்புறத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த அவர்களால் முடியும் என்பதை உணரவைக்கிறது. இந்தச் செயல்பாடுகளில் குழந்தைகளின் பங்களிப்புகள், எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அவை மதிப்பு மற்றும் பாராட்டு மிக்கவை என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

## தேவையானவை:

- சிறிய பூவாளி
- குழந்தைக்கேற்றத் தட்டு மற்றும் கரண்டிகள்

## என்ன கற்றுக்கொள்கிறோம்:

- பொறுப்பு மற்றும் பங்களிப்பு உணர்வை வளர்த்துக் கொள்ளுதல்.
- அவர்கள் செயல்களினால் சுற்றுச்சூழலிலும் மற்றவர்களிடத்தும் ஏற்படும் தாக்கத்தைப் புரிந்துகொள்ளுதல்.

## உங்கள் குழந்தையுடன் நீங்கள் என்ன செய்யலாம்:

1. **செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல்:**

- உங்கள் குழந்தைக்கு ஒரு சிறிய பூவாளியைக் கொடுத்துச் செடிகளுக்கு எவ்வாறு தண்ணீர் ஊற்றுவது என்பதை கற்றுக் கொடுக்கவும்.
- செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதன் முக்கியத்துவத்தையும், செடிகள் வளர அது எவ்வாறு உதவுகிறது என்பதையும் விளக்குங்கள்.
- உங்கள் குழந்தையின் முயற்சியைப் பாராட்டுங்கள்.

2. **உணவிற்கான மேசையை அமைத்தல்:**

- உணவு வேளைக்கான மேசையை அமைப்பதில் உங்கள் குழந்தையை ஈடுபடுத்துங்கள்.
- மேசையில் மெல்லிழைத் தாள்கள் அல்லது தட்டு மற்றும் கரண்டிகளை வைப்பது போன்ற எளிய வேலைகளை உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள்.
- உணவு வேளையின் போது உங்கள் குழந்தையின் பங்களிப்பு அனைவருக்கும் எவ்வாறு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதை விளக்குங்கள்.

## பெற்றோர்களுக்கான குறிப்புகள்:

உங்கள் குழந்தையின் முயற்சிகளை ஊக்குவித்துப் பாராட்டுங்கள். நேர்மறையான மற்றும் ஆதரவான சூழலை உருவாக்கி அவர்களின் பங்களிப்புகளை எண்ணிப் பெருமிதம் கொள்ளச் செய்யுங்கள். இது அவர்களுக்குப் பொறுப்புணர்வையும், அவர்களால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற உணர்வையும் வளர்க்க உதவும்.





# கனிவன்புச் சீட்டுகள்

குடும்பத்திற்குள் கனிவன்புச் சீட்டுகளை உருவாக்குவதும் கொடுப்பதும் குழந்தைகளுக்குக் கனிவன்பின் முக்கியத்தை விளக்குவதுடன் அவர்களின் செயல்கள் தங்களின் அன்புக்குரியவர்களுக்கு எத்தகைய மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதை அறிவார்கள். இந்தச் செயல்பாடு குழந்தைகளிடம் இரக்க குணத்தை வளர்க்கவும், குடும்ப உறுப்பினர்களை மகிழ்ச்சியாக உணர வைக்கவும் உதவுகிறது.

## தேவையானவை:

- காகிதம், வண்ணக்கட்டி, ஒட்டுத் தாள்கள் (stickers) மற்றும் பிற கைவேலைப் பொருள்கள்

## நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்:

- இரக்கத்தை வளர்ப்பது மற்றும் கனிவன்பின் தாக்கத்தைப் புரிந்துகொள்ளுதல்.
- கைவேலை செயல்பாடுகள் மூலம் நுண் இயக்கத் திறன்களை மேம்படுத்துதல்.

## உங்கள் குழந்தையுடன் நீங்கள் என்ன செய்யலாம்:

1. **சீட்டுகளை உருவாக்குதல்:** குடும்ப உறுப்பினர்களுக்குக் கனிவன்பு சீட்டுகளை உருவாக்க உங்கள் பிள்ளைக்குக் காகிதம், வண்ணக்கட்டிகள், ஒட்டுத் தாள்கள் மற்றும் பிற கைவேலைப் பொருள்களைக் கொடுக்கவும்.
2. **செய்திகளை எழுதுதல்:**
- கட்டி அணைத்தல், மகிழ்ச்சியாக நடனம் ஆடுதல் அல்லது கை-கால் பிடித்துவிடுதல் போன்ற செயல்களைக் குறிக்கும் படங்கள் அல்லது சின்னங்களை வரைய குழந்தைகளை ஊக்குவிக்கவும்.
- "கட்டி அணைத்தல்" அல்லது " மகிழ்ச்சியாகநடனம் ஆடுதல்" போன்ற எளிய, கனிவான செய்திகளுடன் சீட்டுகளை உருவாக்க உங்கள் குழந்தைக்கு உதவுங்கள்.
3. **சீட்டுகளை மீள் பெறுதல்:**
- குடும்ப உறுப்பினர்களுக்குச் சீட்டுகளைக் கொடுக்க உங்கள் குழந்தையை ஊக்குவிக்கவும்.
- ஒவ்வொரு சீட்டையும் அதற்கேற்ற கனிவான செயலுக்கு எவ்வாறு மீள் பெறலாம் என்பதை விளக்கவும்.
- குடும்பத்திற்குள் கனிவன்பைத் தருவதும் பெறுவதும் எவ்வளவு மகிழ்ச்சியைத் தரும் என்பதைக் குழந்தைகள் புரிந்துகொள்ள இது உதவுகிறது.





## பெற்றோர்களுக்கான குறிப்புகள்:

உங்கள் குழந்தையுடன் சேர்ந்து கனிவன்பு சீட்டுகளை உருவாக்குவதிலும் பரிமாறிக்கொள்வதிலும் பங்கு பெறுங்கள். அவர்களின் படைப்பாற்றலைக் கொண்டாடுவதுடன் இந்தச் சிறிய செயல்கள் குடும்பத்தில் எத்தகைய பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதைப் பற்றிப் பேசுங்கள். வீட்டில் கனிவன்பு கலாச்சாரத்தை உருவாக்குவது அன்புக்குரியவர்களை மகிழ்விப்பதன் முக்கியத்துவத்தை குழந்தைகள் புரிந்துகொள்ள உதவும்.